## நெல்லை மேற்கு மாநகரில் “ஓரணியில் தமிழ்நாடு”

# 100 சதவீதத்திற்கும் அதிகமாக உறுப்பினர் சேர்த்தால் ரொக்க பரிசு!

### நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நெல்லை.ஜுலை.11

நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் ”ஓரணியில் தமிழ் நாடு உறுப்பினர் சேர்க்கை இலக்கை தாண்டி 100 சதவீதத் திற்கு அதிகமாக உறுப்பினர்களை சேர்ப்பவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்என நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு. சுப்பிரமணியன் அறிவிப்பு வெளி யிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்ப தாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல மைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக துணை பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள்,கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர் வாகத்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோரின் அறிவுறுத்தலின்படி, நெல்லை மத்திய மாவட்ட பொறுப் பாளர் மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ ஆலோசனையின்படி,

”ஓரணியில் தமிழ்நாடு உறுப்பி னர் சேர்க்கை நெல்லை மத்திய மாவட்டம் நெல்லை மேற்கு மாநக ரத்தில் சிறப்பாக நடைபெற்று வரு கிறது.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு வாக் குச்சாவடிக்கு குறைந்தது 30% வாக்காளர்களை தி.மு.க உறுப்பின ராக சேர்க்க வேண்டும் என இலக்கு நிர்ணயித்துள்ளார்கள்.

அதன்படி நெல்லை பேட்டை மேற்கு பகுதி 20வது வார்டு 194 வது பாகத்தில் மொத்தம் 893 வாக்குகள் உள்ளது. அதில் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்த குறைந்த பட்ச இலக் கான 30% கணக்கின்படி 268 உறுப்பினர்கள் வருகிறது. வாக்குச் சாவடி டிஜிட்டல் முகவர் (BDA)

சாகுல் ஹமீது பைசல் கனி நிர் ணயித்த குறைந்த பட்ச இலக்கான 30% மேலாக 331 (111%) உறுப்பி னர்களை வெற்றிகரமாக சேகரித்து நெல்லை மேற்கு மாநகரத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.மேலும் உறுப்பினர் சேர்க்கை பணிகளை யும் தொடர்ந்து வருகிறார்.அதற்கு உறுதுணையாக இருந்த 20வது வட்ட தி.மு.க பொறுப்பாளர் மாமன்ற உறுப்பினர் மன்சூர் மற் றும் உறுப்பினர் சேர்க்கை பணியை வெகு சிறப்பாக செய்த 20வது வார்டு வாக்குச்சாவடி டிஜிட் டல் முகவர் (BDA)

சாகுல் ஹமீது பைசல் கனி 9486783978 ஆகியோருக்கு நெல்லை மேற்கு மாநகர தி.மு.க சார்பில் நெஞ்சார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நிர்ணயித்த இலக் குக்கும் மேலான உறுப்பினர்களை முதலாவதாக சேர்த்தமைக்காக 194வது வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர் சாகுல் ஹமீது பைசல் கனிக்கு நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் ஒரு உறுப்பின ருக்கு ரூ.10 வீதம் 331 உறுப்பின ருக்கு ரூ.3310 நெல்லை சட்டமன் றத் தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துச்செல்வி முன்னிலையில் வழங்கப்படும்.

மேலும் நெல்லை மேற்கு மாந கரத்தில் உள்ள 20 வார்டுகளில் அதிகமான உறுப்பினர்களை முத லாவதாக 100% மேல் சேர்ப்பவர்க ளுக்கு ஒரு உறுப்பினருக்கு ரூ.10 வீதம் ஒரு வார்டில் ஒருவருக்கு (வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவருக்கு BDA) மேற்கண்டவாறு வழங்கப்படும். என்பதை தெரி வித்து கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள் ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. வைரமுத்து

ஜூலை 11 (2006)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தில் கழகப் பணியாற்ற தொடங்கி தேனி மாவட்டக் கழகம் பிரிக்கப்பட்டபோது, அம்மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டு பணியாற்றியவர்..

வடுகப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராக இரண்டு முறை பொறுப்பு வகித்தவர்.

வடுகப்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ‘இயக்கத்திற்கு ஒரு வைரமுத்துவையும், இலக்கியத்திற்கு ஒரு வைரமுத்துவையும் தந்த வடுகப்பட்டி’ என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு மற்றும் திருநெல்வேலி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 12.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | கன்னியாகுமரி கிழக்கு | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 3.00 மணி | கன்னியாகுமரி மேற்கு | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | மாலை 6.00 மணி | திருநெல்வேலி மத்திய | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | நாகர்கோவில் | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினசேரி, நாகர்கோவில். |
| | மாலை 4.00 மணி | பத்மநாபபுரம் | எம்.கே.ஆடிட்டோரியம், வேர்க்கிளம்பி. |
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மஹால், வள்ளியூர். |
| 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பாளையங்கோட்டை | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 09.07.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


## போலீஸ் மரியாதையுடன் 30 குண்டுகள் முழங்க

# பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் உடல் சொந்த ஊரில் அடக்கம்!

இராமநாதபுரம், ஜுலை 11

90 வயதான மூத்த தமிழ் அறிஞர் பெருங்க விக்கோ வா.மு.சேதுரா மன் அவர்கள் சென்னை யில் மரணம் அடைந்தார். இவர், ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அருகே ஆண்டநாயகபுரத் தில் 1935-ஆம் ஆண்டு பிறந்தவர். நெஞ்சத்தோட் டம், அய்யப்பன் பாமாலை, தமிழ் முழக் கம், தாய் மண், சேது காப் பியம் உள்பட ஏராள மான நூல்களை எழுதியுள்ள வா.மு.சேது ராமன் திருவள்ளுவர் விருது, கலைமாமணி விருது, சி.பா.ஆதித்தனார் முத்த தமிழறிஞர் விருது உள்பட பல்வேறு விருது களை பெற்றுள்ளார்.

### அமைச்சர் பெரிய கருப்பன் அஞ்சலி!



சென்னையில் அவரது உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட தலைவர்கள், தமிழ் அறி ஞர்கள் அஞ்சலி செலுத்தி னர்.

அவரது உடலை சொந்த ஊரில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டது. அதன்படி ஆண் டநாயகபுரம் கிராமத்துக்கு கொண்டு வரப்பட்ட அவரது உட லுக்கு இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அரசு சார்பில் தமிழக கூட்டுறவுத்துறை அமைச் சர் கே.ஆர்.பெரியகருப் பன், முதுகுளத்தூர் கோட் டாட்சியர் சண்முகம் உள்ளிட்ட அதிகாரிகள் இறுதி அஞ்சலி செலுத்தி னார்கள். ஆண்டநாயகபு ரம், அபிராமம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

வா.மு.சேதுராமனின் மகன்கள் திருவள்ளுவர், கவியரசன், ஆண்டவர், தமிழ் மணிகண்டன் இறு திச் சடங்குகளை செய்த னர். துப்பாக்கி ஏந்திய போலீசாரின் மரியாதையு டன், 30 குண்டுகள் முழங்க உடல் அடக்கம் நடந்தது.

## திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி தலைவர்

# அண்ணாதாசன் என்கிற மாரிமுத்து மறைவு! கழகத்தினர் அஞ்சலி



திருவாரூர், ஜுலை 11-

திருவாரூர் மாவட்ட திமுக இலக்கிய அணித் தலைவரும், திராவிட முன் னேற்றக் கழகத்தின் மூத்த உறுப்பினரும், மிசா போராட்டத்தில் கைதாகி சிறை சென்றவரும், மொழி போராட்டத்தில் ஈடுபட்டு சிறையில் இருந்தவருமான டி.எஸ்.அண்ணாதாசன்என் கிற மாரிமுத்து அவர்கள் நேற்று (10.07.2025) காலை இயற்கை எய்தினார்.

மறைந்த டி.எஸ். அண் ணாதாசன் என்கிற மாரி முத்து அவர்கள் திமுகவின் தொடக்ககால உறுப்பின ராவார். கழகத்தின் மீது கொண்டபற்றால்தன்பெய ரான மாரிமுத்துவை அண் ணாதாசன் என்று மாற்றிக் கொண்டவர். நகர வார்டு கழக, நகரகழக, மாவட்டக் கழகங்களின் பல்வேறு பொறுப்புக்களை வகித்த வர். மறைந்த டி.எஸ். அண் ணாதாசன் என்கிற மாரி முத்து அவர்களுக்கு மகாலட்சுமி என்கிற மனை வியும்,ஆசைத்தம்பிஎன்கிற மகனும் அன்புசெல்வி என் கிற மகளும் உள்ளனர்.

அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜ யன், நகர செயலாளர் ஆர். எஸ்.பாண்டியன்,மாவட்ட இலக்கிய அணி அமைப்பா ளர் புலவர்.எண்கண் மணி உள்ளிட்டகழகநிர்வாகிகள் தங்கள்இரங்கலைதெரிவித் துள்ளனர் அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (10.07.2025)மாலைதிருத்து றைப்பூண்டி அண்ணா நக ரில் இருந்து புறப்பட்டது.

இறுதி சடங்கு நடை பெற்றது,

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சீர்காழி வை. ஞானசேகரன்

ஜூலை 11 (2014)



அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் தமிழ்ப் பெருமன்ற செயலாளராக – மாணவர் திராவிட கழகத் தலைவராகவும் இருந்தபோது மாணவர்களை ஒருங்கிணைத்து தமிழின உணர்வு பொதுக்கூட்டம் தமிழீழ ஆதரவு பொதுக்கூட்டங்களை தொடர்ந்து நடத்தியதோடு, முதன்முதலாக தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்தவர்.

ஈழத் தமிழர்களுக்காக நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.

கீழத் தஞ்சை மாவட்ட தி.க. செயலாளராக இருந்தபோது, ஈழத் தமிழர்களுக்கு மயிலாடுதுறையில் மிகப் பெரிய மாநாட்டை நடத்தியவர்.

அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் படிக்கும்போது மிசாவை கடுமையாக எதிர்த்து மாணவர்களிடம் துண்டறிக்கை வழங்கியவர்.

சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, ‘கலைஞர் செம்மொழி நூலகம்’, ‘தளபதி மு.க.ஸ்டாலின் சிறுவர் விளையாட்டரங்கம்’ ஆகியவற்றை அமைத்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெரி. அழகு

ஜூலை 11 (1997)



கழகம் துவங்கிய காலத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர். திருப்பத்தூர் தொகுதியின் வட்டச் செயலாளராக பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். பின்பு இராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

சிவபுரிபட்டி ஊராட்சித் தலைவராகவும், சிங்கம்புணரி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பணியாற்றி மக்களிடம் நற்பெயர் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன், குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் – மிசா கைதியாக ஓராண்டு காலம் மதுரை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.